ஆசிரியர்களின் முறையீடு

*223 வினா.—திரு. கரு. சீமைச்சாமி :
திரு. வி. கே. கோதண்டராமன் } மதிப்பிற்குரிய
திரு. இல. பலராமன் :

கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடங்களை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களிடம் மார்ச் மாதத்தில் சென்னையில் முறையிட்டுக் கொண்டனரா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அமைச்சர்களுக்கு வாசித்தளிக்கப்பட்ட வரவேற்பிதழில் தொடக்கப்பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளும் பிற வேண்டுகோளும் உடன் இருந்தது.

(இ) தொடக்கப்பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

DR. H. V. HANDE : In the representation made to the Hon. Chief Minister, may I know whether the teachers have explained any reasons that prompted them to request the Government to take over these schools?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய முழுக் காரணங்கள் பேசும்போது குறிப்பிட்டுச் சொல்லுகிறார்கள். அரசாங்கத்தின் கீழே தனியார் பள்ளிகள் வருமானால் நிர்வாகம் ஒழுங்கான முறையிலே, ஒரே மாதிரியான வாய்ப்பு ஊர் ஆட்சி ஒன்றிப்பு மன்றத்திலே இருப்பதன் மூலம் இதிலே உள்ள சங்கடங்கள் நெருக்கடிகள் ஏற்படும் என்றும், கல்வித் துறையிலே அதை இணைப்பதன் மூலம் நல்ல முறையில் நடைபெறும் என்றும் இதற்காக ஒரு தனி போர்டை ஏற்படுத்தினால் அந்த போர்டு அதைக் கவனிக்கும் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ : இப்போது அரசாங்கத்தினால் நடத்தப்படுகின்ற பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுடைய கல்வியின் தரம் மோசமாக இருப்பதாகவும், அங்கே குறைந்த மாணவர்கள்தான் தேர்ச்சி பெறுவதாகவும் தெரிய வருகிறது எனவே, அதைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அங்கத்தினருடைய கேள்வி இந்தக் கேள்வியுடன் தொடர்பு உடையது அல்ல. இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

1967 ஜூலை 10]

திரு. இல. பலராமன் : தனியார் பள்ளிகளையும், பஞ்சாயத்துப் பள்ளிகளையும் சர்க்காரே ஏற்று நடத்தும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதைப்பற்றிய முடிவு ஒன்றும் அரசாங்கத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்தக் கருத்து பலரால் பலவகையில் எடுத்துச் சொல்லப்பட்டு வருகிறது. பஞ்சாயத்து ஒன்றியங்களே நடத்த வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு இதைப் பற்றிய முடிவு எடுக்கலாம் என்று இருக்கிறது.

திரு. கே. விநாயகம் : ஐயா, அமைச்சர் அவர்களைச் சந்தித்த ஞாதுகோஷ்டியில் தனியார் பள்ளியிலே வேலை செய்கிற ஆசிரியர் கள் எவராகிலும் இருந்தார்களா? தனியார் பள்ளிகளில் தரம் உயர்ந்திருக்கிறது. இப்போது அதையும் மாற்றுவதற்கு அரசாங் கம் தலையிடுவார்களா? அல்லது அதைக் கெடுக்காமல் விட்டுவிடு வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : யார் யார் இருந்தார் கள் என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆசிரியர்கள் சங்கத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தனியார் பள்ளிகளைச் சேர்ந்திருக்கிற வர்கள். அவர்களிடையே இரண்டுவிதக் கருத்துக்கள் இருக் கின்றன. அதை ஆராய்ந்து அதை மேற்கொண்டால் கல்வி தரமாகவும், செம்மையாகவும் இருக்குமென்று கவனத்திலே கொண்டு அந்தக் கருத்தை மேற்கொள்வதுபற்றி முயற்சிக்கலாம். எது நல்ல முறை என்பது ஆராயப்பட்டு தக்க முறையில் கருத் துக்கள் பரிமாறப்பட்டு அதைப்பற்றி முடிவுகள் அரசாங்கம் மேற்கொள்ளும்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தனியார் தங்கள் பள்ளிகளை மூடிவிடுகிறபோது அந்தப் பள்ளிகளிலே பணியாற்று கிற ஆசிரியர்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சம்பந்தப் பட்ட ஊராட்சி ஒன்றிப்பு மன்றத்திற்குச் சர்க்கார் ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : திடீரென்று தனியார் பள்ளிகளை மூடுகின்றபோது அவற்றில் படிக்கின்ற மாணவர்களுக் கும், பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் சங்கடம் ஏற்படாத வகையில் அந்த முறையைச் சர்க்கார் மேற்கொள்ளும். அந்தப் பள்ளிக்கூடங்களை ஒன்றிப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வருகின்ற நேரத்தில் பஞ்சாயத்து ஒன்றிப்புகளே எடுத்துக் கொள்ளும். அரசாங்கம் ஏற்று நடத்தவேண்டுமென்று வரும் போது அரசாங்கம் எடுத்து நடத்தக்கூடிய கட்டம் வருகிறது. சில பல உயர்நிலைப்பள்ளிகள் அப்படித்தான் வைத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றன.

திரு. செ. பாலசுப்பிரமணியன்: பஞ்சாயத்து யூனியன் நடத்து கின்ற அரம்பப் பள்ளிகளை அரசாங்கத்தினுடைய நேரடி நிர்வாக பொறுப்பில் நடத்தாவிட்டாலும், அங்கே பணியாற்றுகின்ற

ஆசிரியர்களுடைய மாற்றங்கள் முதலியவற்றைக் கல்வி இலாக்கா செய்வதற்கு அரசாங்கத்திற்கு யோசனை உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலிலே குறிப்பிடப் பட்ட அந்தக் கருத்துக்களெல்லாம் பரிசீலிக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. இந்தக் கருத்துக்களெல்லாம் ஆலோசனை குழுவிலே வைத்து முடிவு செய்யப்படும்.

திரு. பி. வேலுசாமி : ஐயா, பள்ளி ஆசிரியர்களை ஊர்க்காவல் படையிலே சேர்க்கும்போது வயது முதலியவற்றைக் கவனிக் காமல் என்னைப் போன்ற கிழவர்களையெல்லாம் கூட சேர்த்துக் கொள்ளுகிறார்கள். ஆகையால் அதைப் போக்குவதற்கு ஒரு வயதை நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஊர்க்காவல் படை யில் சேருவதற்கு என்னென்ன விதிமுறைகள், நிபந்தனைகள் இருக் கின்றன என்பது போன்ற தகவல் என்னிடம் இல்லை. கனம் உறுப்பினருடைய கருத்து முறைப்படத் தெரிவிக்கப்படுமானால் தக்க நடவடிக்கை எடுக்கலாமா என்று யோசிக்கப்படும்.

திரு. வி. எஸ். எஸ். மணி : தனியார் நடத்துகின்ற பள்ளிகளில் அந்தப் பள்ளிகளை நடத்தக்கூடியவர்கள் சொந்த லாபத்தைக் குறித்து நடத்துகிறார்களா? அல்லது பொது நலத்தைக் குறித்து நடத்துகிறார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொதுநல நோக்கத் தோடு நடத்த வேண்டும் என்பதுதான் முக்கியமான நோக்கம். அந்த நோக்கம் நிறைவேற்றப்படாத நிலையில் இருக்கிறது என்பது பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் கவனிக்க படும்.

திரு. கே. போஜன் : அரசாங்க ஆரம்பப் பள்ளிகளிலே பணி யாற்றக் கூடிய ஆசிரியர்களுடைய ஊதியத்தைவிட தனியார்ப் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுடைய ஊதியம் மிகவும் குறைவாக இருக்கிறது. அதனால்தான் அரசாங்கம் அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஆசிரியர்கள் கூறுகிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும், அரசாங்கப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கும் சம்பளத்தில் வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை. இரண்டு சாராருக்கும் ஒன்றிப்பு மன்றத்தின் மூலமாகத்தான் சம்பளம் பட்டுவாடா செய்யப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : திருப்பூரில் நகராட்சி மன்றம் நடத்துகின்ற பள்ளியைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நீண்ட காலமாகக் கோரி வருகிறது. அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

1967 ஜூலை 10]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இதைப்பற்றிப் பல நகராட்சி மன்றங்களும் பலவகையிலே தெரிவித்து வருகின்றன. அரசாங்கம் இதிலே இருக்கின்ற கூறுபாடுகளை ஆராய்ந்து எந்த வகையில் நடத்துவதன் மூலம் செம்மையாக நடத்த முடியுமோ அந்த முறையை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. விநயகம்: பொதுவாகக் கல்வித் துறையைப்பற்றி சொல்லும்போது ஆரம்பக் கல்வி, உயர்தரக் கல்வி, கல்லூரிக் கல்வி இவற்றைப்பற்றியெல்லாம் ஆராய்வதற்கு, இதிலேயுள்ள சிக்கல் களைத் தவறுகளை நீக்குவதற்கு, நல்ல முறைகளைப் பயன்படுத்து வதற்கு ஒரு எஜுகேஷனல் கமிஷன் அல்லது கமிட்டி போடலாம் என்று கல்வி அமைச்சர் ஒரு முறை அறிக்கை விட்டார்கள். இதிலே ப்ரபசர்கள், மேனேஜ்மென்டார்கள், மற்றும் ரிசர்ச் ஸ்காலர் கள் இவர்களையெல்லாம் போட்டு முடிவு எடுக்கலாம் என்ற யோசனை இருந்தது. அதைக் கைவிடப் போகிறார்களா? அல்லது அதை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப் போகிறார்களா? ஒவ்வொரு முறையும் கல்வித் துறையில் கைவைத்துக் கெடுத்து விடக்கூடிய நிலைமை இருக்கிறது. அவர்கள் விருப்பப்படி முறை களை மேற்கொள்வார்களா? அல்லது வேறு முறைகளை மேற்கொள் வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கல்வித் துறையைப் பொறுத்த வரையில், பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. கல்வி யினுடைய தேவைக்கு பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகள், தனியார் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிப்பு பள்ளிகள், ஆங்கிலோ-இந்தியன் பள்ளிகள், அரசாங்கமே நடத்துகின்ற பள்ளிகள் என்று பல வகைப்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. அவற்றிலே உள்ள சிக்கல் களை ஆராயும் முயற்சியிலே அரசு ஈடுபட்டிருக்கிறது. இது சம்பந்தமாக ஊட்டியிலே மாநாடு கூட்டி ஆரம்பப் பள்ளிகளைப் பற்றிய மாநாடு ஒரு நாளும், தலைமை ஆசிரியர்களைக் கூட்டி வைத்து ஒரு நாளும், கல்லூரி முதல்வர்களைக் கூட்டி வைத்து ஒரு நாளும் விவாதித்து இது சம்பந்தமாகப் பிரச்சினைகள் எல்லாம் ஆராயப்பட்டு சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை வகுத்துத் தொகுத்துத் தரும்படி அதிகாரிகளிடம் சொல்லி யிருக்கிறேன். இதிலே உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து முதலிலே தெரிவித்தபடி கல்வி ஆலோசனைக் குழு மூலமாக அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள், மேல் அவை உறுப்பினர்கள் கல்வித் துறை நிபுணர்கள் ஆகியவர்களைக்கொண்ட ஒரு தனிக் கமிட்டி மூலமாக ஆராயலாமா என்பதுபற்றி முடிவு செய்யப்படும். இந்த அரசு கெடுப்பதற்காகக் கைவைக்காது. இந்த அரசு எதை யும் செம்மைப்படுத்த முடியுமா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் கைவைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. முனு. ஆதி: தலைவர் அவர்களே, இந்தத் தனியார் நிறுவன பள்ளிகளுக்கு டீச்சர்ஸ் கிராண்ட்டை நேராக நிறுவனத்தினருக்கு தந்துவிடுகிறோம். இதிலே பல புகார்கள் வருகின்றன. ஆசிரியர் களுக்குச் சம்பளம் கொடுப்பதிலே 5 ரூபாய், 10 ரூபாய் என்று கமிஷன் பிடித்துக்கொண்டு சம்பளத்தைக் கொடுத்து, முழுச் சம்பளத்திற்கும் சம்பளப் பட்டுவாடா ரசீதில் கையெழுத்து வாங்கிக்கொள்ளுகிறார்கள். அப்படி இல்லாமல் ஆசிரியர்களுக்கு நேரடியாக டெபுடி இன்ஸ்பெக்டர் மூலமாக அல்லது யூனியன் மூலமாகச் சம்பளம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நேரடியாக அனுப்பப்பட்ட காலமும் ஒன்று இருந்தது. பிறகு, இப்போது மானேஜ்மெண்ட் மூலமாக அனுப்புகிற முறையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு முறைகளையும் மேற்கொண்டு ஆராய்ந்து, எந்த முறை செம்மையாக இருக்க முடியும் என்று ஆராய்ந்த பிறகுதான் தக்க முடிவு எடுக்க முடியும்.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, தனியார் நடத்தும் பள்ளிகளைப்பற்றி கல்வி இலாகா மூலம் பல புகார்கள் அரசாங்கத் திற்கு வந்திருப்பது உண்மையா? அப்படியானால் அவைகள் மீது என்ன நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: புகார்கள் எல்லாப் பள்ளிகளைப்பற்றியும் வருகின்றன. குறிப்பாக, தனியார் பள்ளி களைப்பற்றியும் வருகின்றன. சீர்படுத்தும் முறையை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. நான் முதலிலே சொல்லியபடி, அரசாங் கத்திற்கு வரக்கூடிய பல்வேறு புகார்கள் அடிப்படையில், எல்லா வற்றையும் ஆராய்ந்து, எந்த முறையை மேற்கொள்ளுவதன் மூலம் இத்தகைய புகார்களுக்கு இடமில்லாமல் செய்யலாம் என்று முடிவு எடுக்க வேண்டும். எல்லாவற்றையும் தொகுத்து வைக்கிற முயற்சி இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிறகு அவைகளைக் கல்வி ஆலோசனைக் குழுவில் வைத்து ஆராய்ந்து தக்க முடிவுகளை எடுக்கலாம்.

திரு. ஜி. ஆர். எட்மண்ட் பெர்னாண்டோ: தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் விநாயகம் அவர்கள் கேட்கும்போது இதற்கு முன் இருந்த கல்வி அமைச்சர்கள் கல்வியின் தரத்தைக் குறைத்தார்கள் என்று சொன்னார்கள். எந்தெந்த அமைச்சர்கள் எந்தெந்த வகைகளில் கல்வியின் தரத்தைக் குறைத்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கனம் உறுப்பினரும் நீண்ட நாட்களாக இருக்கிற காரணத்தினால் எந்தெந்த முறையில் கெடுத்திருக்கிறார்கள் என்று யூகித்துப் பார்ப்பாரானால் நன்றாகத் தெரிந்துகொள்ளலாம்.

1967 ஜூலை 10]

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, பெரும்பாலும் கல்வித் துறையிலே அமைச்சராக வருகிறவர்களெல்லாம் கல்வியைப்பற்றி ஒன்றுமே தெரியாதவர்கள்—ஆல்வேஸ் லாயர்ஸ்—வக்கீல் தொழிலிலே இருக்கிற அரசியல்வாதிகள்தான் எப்போதும் வருகிறார்கள் என்ற அபிப்பிராயம் ஆசிரியர்களிடம் இருப்பது அமைச்சருக்குத் தெரியுமா? நான் ஆசிரியர்கள் நினைக்கின்ற கருத்தைத்தான் இப்போது எடுத்துச் சொன்னேன். அந்த மாதிரி ஆசிரியர்கள் அரசாங்கத்திற்கு ஏதாவது அனுப்பியிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பழைய மந்திரிகளைப்பற்றிய கருத்துக்களுக்கு, பாராட்டுரைகளுக்கு கனம் உறுப்பினர்தான் பொறுப்பு அதைப் பொறுத்து. ஆனாலும், மாற்றங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நானாக எந்த முடிவும் எடுப்பதில்லை என்று நான் கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனேயே சொல்லியிருக்கிறேன். எதையும் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாம் என்று, திடீரென்று எந்தப் புதிய மாற்றத்தையும் இப்போது செய்யாமல், ஆராய்ந்து பிறகு முடிவு எடுக்கலாம் என்ற முறையைத்தான் மேற்கொண்டிருக்கிறது இந்த அரசு.

திரு. க. ர. நல்லசிவன் : தலைவர் அவர்களே, அரசியல் கட்சிகள் தங்களுடைய அடிப்படையான கொள்கைகளைக் குழந்தைகள் மனதில் பதிய வைப்பதன் மூலமாகத்தான் புதிய சமுதாயத்தை உண்டு பண்ண முடியும் என்ற அந்த அடிப்படையில் கல்வித் துறையை இயக்க வேண்டுமென்ற கருத்தோடு இந்த அரசு நடந்து கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன். அல்லது, ஏதோ அவர்கள் போக்கிலேயே நடக்க அனுமதிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலேயே குறிப்பிட்டேன், எந்தக் கட்சிக் கருத்தையும் புகுத்தும் நோக்கம் இல்லை. இந்தத் துறையிலே சிலபல முடிவுகள் எடுகக, கல்வி ஆலோசனைக் குழுவில் வைத்து ஆராய்ந்து முடிவு எடுக்கலாம் என்று இருக்கிறது. அந்தக் குழுவில் பல கட்சித் தலைவர்களும், முக்கிய உறுப்பினர்களும் இடம் பெற இருக்கிறார்கள். ஆகவே, எதுவும் எந்தக் கட்சியின் அடிப்படையிலும் செய்வதாக இருக்காது.

மாவட்ட கழக உயர்நிலைப்பள்ளிகள்

* 224 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :
திரு. முனு. ஆதி :
திரு. கெ. இரா. ஞானசம்பந்தம்:
} மதிப்பிற்குரிய

கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநிலத்திலுள்ள போர்டு உயர்நிலைப் பள்ளிகள் அனைத்தும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள உத்தேசம் உண்டா ?